**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.128/2021**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 11.06.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர சந்திப்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது காவல் நிலையத்தில் பணியாற்றிய சிறப்பு உதவி ஆய்வாளர் வேலைய்யா மற்றும் முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஆந்தோனி ஆகியோர்கள் தற்போது இறந்துவிட்டார்கள். நான்தான் மேல்விசாரணை அதிகாரி ஆவேன். 03.11.2016 ம் தேதி தென்காசி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் வேலைய்யா நிலைய பொறுப்பில் இருந்தபோது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று பார்த்தபோது காயம்பட்ட நடராஜன் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கிடைத்த தகவலை பெற்று திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு 18.00 மணிக்கு சென்று காயம்பட்ட நபர் நடராஜன் என்பவரிடம் புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து

21.00 மணிக்கு நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.426/2016 பிரிவு 452, 294(பி), 323, 307, 506(2) இதச வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 8 ஆகும். பின்னர் இந்த வழக்கை குற்றால காவல் நிலைய ஆய்வாளர் அந்தோனி என்பவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தேதி, 22.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிவராமன், அசோகன் ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். வரைபடம் அ.சா.ஆ.9. ஆகும். பின்னர் சாட்சிகள், சதீஸ், மணிகண்டன், குமார், சிவராமன்,அசோகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் அந்த வழக்கு கோப்பினை 04.11.2016 ம் தேதி நான் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரித்தபோது முந்தை ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் அவரிடம் கூறியதுபோல் என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவயிடத்தை பார்வையிட்டபோது ஏற்கனவே தயார் செய்த பார்வை மகஜர், வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. வழக்கின் முதல் தகவல் அறிக்கையை ஒப்படைத்த முதல் நிலை காவலர் வடிவேல் முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரியை பற்றி தகவல் கிடைத்தன் அடிப்படையில் 04.11.2016 ம் தேதி மாலை 16.30 மணியளவில் தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் வைத்து எதிரி பாபுசுந்தர் என்பவரை கைது செய்து, சாட்சிகள் மாரிமுத்து, முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் அன்றைய தினம் மாலை 17.45 மணியளவில்

வழக்கின் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வாதி அடிக்க பயன்படுத்திய செங்கல் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி என்னை கூட்டி சென்றால் சம்பவத்தின்போது நடராஜனை அடித்த செங்கலை எடுத்து அடையாளம் காட்டி தங்களிடம் எடுத்துக்கொடுக்கிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10**. அத்தாட்சி **அ.சா.ஆ.11**.

பின்னர் எதிரியையும், சொத்துக்களையும் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சொத்தை படிவம் 91ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.12**.

சாட்சிகள் மாரிமுத்து, முத்துக்குமார் , முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் வேலைய்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர். சமீமா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். கிருஷ்ணா மருத்துவமனை மருத்துவர் சந்திரகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன்.

03.12.2016ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(பி), 323, 307, 506(2) இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**</u>

புகார் பெற்றால் நேரிலோ போனிலோ பெறும்போது காவல் நிலைய பொது நாட்குறிப்பில் நாள், நேரம் குறிப்பிட்டு பதிவு செய்வோம் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பு விவரங்கள் வழக்கு கோப்பில் இல்லை. பொது

நாட்குறிப்பை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். தகவல் கிடைத்த நேரம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை காலம் 3 பி ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாளும், நேரமும் 3.11.2016 ம் தேதி 21.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நேரத்திற்கு பின்னர்தான் சிறப்பு உதவி ஆய்வாளர் மருத்துவமனைக்கு புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு சென்றாரா என்றால் இல்லை. காவல் நிலைய பொது நாட்குறிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மருத்துவமனையில் இருந்து சாதாரணமாக காயம்பட்டவரின் தகவல்கள் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் காவல் நிலையத்திற்கு தகவல் மருத்துவமனையில் இருந்து உடனடியாக கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். தென்காசி அரசு மருத்துவமனையில் தென்காசி காவல் நிலைய புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஒரு ஆள் எப்போதும் பணியில் இருப்பார். அவர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவநாள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் தகவல்வரப்பட்டுள்ளது என்றால் அது குறித்து வழக்கு கோப்பில் துலங்காது, என்னுடைய விசாரணையிலும் துலங்காது. மருத்துவரிடம் காயம்பட்டவர் அடையாளம் தெரியாத ஒரு நபர் தாக்கியதாக கூறியுள்ளதாக மருத்துவர் என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 4 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளதாக கூறியுள்ளார். அசா.1 ஐ அசா.2, அசா.3 ஆகியோர்கள் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாக துலங்குமா என்றால் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள். விபத்து பதிவேட்டில் காயம்பட்டவர் தானாக வந்து

சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரிடம் அசா.1 தன்னை எந்த ஆயுதத்தினால் தாக்கப்பட்டார் என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டிலும் அது குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தென்காசி போலீசார் சம்பவத்திற்கு மறுநாள் வந்து வாக்குமூலம் வாங்கியதாக அசா.1 என்னுடைய விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. அசா.1 ம் அவருடைய அண்ணனும் புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார்களா என்றால் செய்தார்கள். நடந்ததாக சொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கு முன்பாக எதிரிகளுக்கும் , அசா.1 க்கும் அவர்களை சேர்ந்தவர்களுக்கும் முன்விரோதம் இருந்ததாக என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அசா.1 ன் அண்ணன் சுப்பிரமணியன் எதிரியிடமிருந்து கடன் பெற்றதாகவும், அந்த கடனை எதிரிகள் கேட்க சென்ற போது இந்த பிரச்சனை ஏற்பட்டதாகவும், அரசு தரப்பு வழக்கில் உள்ளது என்றால் சரிதான். அசா.1 ன் அண்ணன் சுப்பிரமணியத்தை இந்த வழக்கில் நான் விசாரிக்கவில்லை. அவர் வெளியூரில் இருந்தனனால் விசாரிக்கவில்லை. எந்த இடம் என்று விசாரணை கோப்பில் துலங்காது. அவர் உள்ளூரில் இருந்தார் என்றால் சரியல்ல. அசா.1 ஐ அவருடைய அண்ணன் சுப்பிரமணியன் சிகிச்சையில் இருக்கும்போது சென்ற பார்த்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவரவில்லை. அசா.1 ஐ முதலில் யார் விசாரித்தார் என்றால் நான் விசாரித்தேன். 04.11.2016 ல் விசாரித்தேன். நேரம் வழக்கு கோப்பில் துலங்காது. அசா.1 ஐ நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஏற்கனவே உள்ள புலன் விசாரணை அதிகாரிதான் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி அந்தோனி அசா.1 ஐ விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அசா.1 ஐ நான் விசாரித்தேன். ஆனால் புலன் விசாரணை அதிகாரியிடம்

சொன்னதுபோல் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை யார் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற விவரம் வழக்கு கோப்பில் துலங்காது. வடிவேல் முருகன் முதல் தகவல் அறிக்கை 21.30 மணிக்கு பெற்று முதல் புலன் விசாரணை அதிகாரியிடம் 1 மணி நேரத்தில் கொடுத்தாரா என்றால் எத்தனை மணி நேரத்தில் கொடுத்தார் என்று வழக்கு கோப்பில் துலங்காது. ஆனால் அரை மணி நேரத்தில் முதல் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு வந்துள்ளார். சாதாரணமாக தபால் கொண்டு செல்லும்போது கடவு சீட்டு கொடுப்போம் என்றால் பொறுப்பு அதிகாரியிடம் தபால் கொடுக்க கடவு சீட்டு தேவையில்லை. நான் வழக்கிற்காக கடவுசீட்டு கொடுக்கவில்லை என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும், அதனை மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. முதல் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திலும், சுற்றுபுறங்களிலும் இருந்து சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அசா.1 தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்ததாக அசா.2 என்னுடைய விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

(நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை பாதியில் நிறுத்தப்படுகிறது. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:33:43 +0530